விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 11 ஸபர் 2 இதழ் 255
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-10-84

## எம்.ஜி.ஆர். பூரண சுகமடைய 'சிவா' கூறிய 'அருமருந்து'!

[கா. யோகநாதன்]

''தமிழ் இளைஞர்கள் ஒற்றுமைப்பட்டுவிட்டார்கள்'' என்ற செய்தியைக் கேட்டால், தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பூரண சுகமடைந்துவிடுவார். இளைஞர்களை ஒற்றுமைப்படுத்த அவர் எவ்வளவோ முயற்சி எடுத்தார். இந்தப் பிரார்த்தனையுடன், இளைஞர்கள் ஒற்றுமைப்பட்டார்கள் என்ற செய்தி அவர் சுகமடைய ஏதுவாக இருக்கும்.''

வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோவிலில் நேற்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சுகமடைய நடந்த விசேட பிரார்த்தனைக்குத் தலைமை தாங்கிப் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: ''தமிழகத்தில் எல்லா மூலை முடுக்குகளிலும் தமிழக முதல்வர் சுகமடையப் பிரார்த்தனை நடைபெறுகிறது. அந்தராமச்சந்திரன்சுகமடைய வேண்டுமென்று இந்த ராமச்சந்திரனை நாம் பிரார்த்திக்கின்றோம். பிரார்த்தனைகள் மூலம், தமிழக முதல்வரின் உடல் நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதாக

(5-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## ● வடபகுதி தீவிரகரவாதிகளுடன் இணையுமாறு கோரி

# மலையகத்தில் சிங்கள இளைஞர் துண்டுப்பிரசுரம் விநியோகம்!

## பாராளுமன்றத்தில் அமைச்சர் 'காமினி' தகவல்

(கொழும்பு)

''வடக்கில் தீவிரவாதிகளின் போராட்டம் நியாயமானது. நேர்மையானது. உடன் அவர்களுடன் வந்துசேருங்கள்' என்று மலையக மக்கள் மத்தியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வேண்டுகோள் விடுக்கும் துண்டுப் பிரசுரங்களை சிங்கள இளைஞர்களே விநியோகித்து வருகிறார்கள்.''

இத்தகவல்களை காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சில சிங்கள இளைஞர்கள் தமிழகம் சென்று உமாமகேஸ்வரனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். வடக்கில் பொலிஸ், இராணுவம் சுடப்பட்டால் எதுவும் பேசாது இருப்பவர்கள் வடக்கில் பயங்கரவாதிகள் சுடப்பட்டதும் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறுகிறார்கள்.

''இலங்கையின் தென் பகுதியிலுள்ள சிலபிரிவினர் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எவ்வாறு ஆயுதப் போராட்டத்தை நடத்தலாம் என்பதுபற்றி உமா மகேஸ்வரனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்தியா சென்றுள்ளனர்'' என்றார்.

''பயங்கரவாதிகள் இந்தியாவில் இருந்துமட்டும் இங்குவரவில்லை. இந்தியாவிலிருந்துமட்டும் இங்கு வரவேண்டிய அவசியமுமில்லை. ஏனைய இலங்கையின் நட்புறவு நாடுகளிலிருந்

(5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## எம். ஜி. ஆர். நலம்வேண்டி 2000 மாணவர் ஊர்வலம்

### பிரார்த்தனையிலும் கலந்துகொண்டனர்

(கிளிநொச்சி)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நலமடைய வேண்டும் என்று கோரி, கிளிநொச்சிசகல பாடசாலைகளையும் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான

[5ம் பக்கம் 5ம் கலம் பாரக்க]

## குண்டுகளை வெடிக்கவைத்து மாதகல் தற்காலிக இராணுவ முகாம் கட்டடம் தகர்ப்பு!

(பண்டத்தரிப்பு-மாதகல்)

மாதகலில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக இராணுவ முகாம் கட்டிடம், நேற்றுமுன்தினமிரவு குண்டுவைத்துத் தகர்த்தெறியப்பட்டது!

நேற்று முன்தினமிரவு சுமார் 8-15 மணியளவில் மூன்று குண்டுகள் வெடித்து, இம் முகாம்சட்டிடத்தைதரை மட்டமாக்கின.

மாதகல் சம்பல்துறைமுகத்துக்கும், காஞ்சிபுரம் சந்திக்குமிடையே இந்தமுகாம் கட்டி

(8ம் பக்கம் பார்க்க)

## ''பெரும் தாக்குதலுக்கு பயங்கரவாதிகள் தயாராகிறார்கள்!''

### பாராளுமன்றத்தில் வின்சன்ட்

(கொழும்பு)

''கடந்தமாதங்களில் இடம்பெற்றபல கொள்ளைச் சம்பவங்கள் பயங்கரவாதிகள் ஒரு பெரும் தாக்குதல்ஒன்றுக்குத் தயாராகிவருவதை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்

(5-ம் பக்கம் 4ம்கலம் பார்க்க

## சபையில் 'நிர்மலா'

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பிய திருமதி நிர்மலா நித்தியானந்தன் கத்தோலிக்க கன்னியாஸ்திரி வேடம் பூண்டு விமான நிலையத்தினூடாகவே சென்றதாகத் தெரிவிக்கப்பட்டதாக அத்தனகலை எம் பி. திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்று பேசுகையில் கூறினார்.

## ● ஆயுதப்படையினரால்சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தப்பட்டது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியிலுள்ள வன்னேரிக்குளத்தில் வவனியா பொலிசாரும் மாங்குளம் இராணுவத்தினரும் நேற்று முன்தினமிரவு கூட்டாக மேற்கொண்ட தேடுதல் வேட்டையில், நாதன் என்று அழைக்கப்படும் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் ஆயுதப் படையினரால் ஒப்படைக்கப்பட்ட சில மணிநேரத்தில் இனந்தெரியாத இளைஞர்களினால் சடலம் கடத்தப்பட்டுள்ளது!

கிளிநொச்சி நீதிமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கொள்ளை தொடர்பாக வன்னேரிக்குளத்தில் நேற்று முன்

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## பாதுகாப்பு பலப்படுத்தப்படும்

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு அரசாங்க செயலகம், மற்றுப் திணைக்களங்களின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேலிடத்தின் பணிப்பைத் தொர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. [க]

## ''ஜனநாயகத்தைப் பாதுகாக்க முயற்சி எடுக்கிறேன்''

### ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

''எம்மைச்சுற்றி குண்டுகள் வைக்கப்பட்ட போதும் ஜனநாயகத்தைப பாதுகாக்க முயற்சி எடுத்துவருகிறேன்''

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன

5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## சிமெந்து கூட்டுத்தாபனத்தில் ரூ. $4\frac{1}{2}$ லடசம் பெறுமதியான உபகரணங்கள் கொள்ளை!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுக் தாபனத்தில் நேற்று முன்தினமிரவு சுமார் நாலரை லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன

நேற்று முன்தினமிரவு 7-15 மணியளவில் காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத் தாபனத்துக்கு டெலிகா வான் ஒன்றில் 10 இளைஞர்கள் வந்திறங்கினர். இவர்கள் காவலர்களை பயமுறுத்திய பின்னர் உள்ளே நுழைந்து துரித கதியில் அங்கிருந்த அலுவலகங்களில் சில பெறுமதி வாய்ந்த உபகரணங்களைகொள்ளையிட்டு சென்றனர்

கம்பியூட்டர் கருவி, ரெலெக்ஸ் கருவி ஆகியவற்றுடன் லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனப் பகுதியின 'போட்டோஸ்ரட்' இயந்திரமொன்றையும், மின்சார அளவுக்கருவி

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## மின்னேரியா, குண்டசாலையில் ஐ.தே.கட்சி வெற்றி!

### சுயேச்சை வேட்பாளர் அனைவரும் கட்டுப்பணம் இழப்பு!!

[கொழும்பு]

மின்னேரியா, குண்டசாலை ஆகிய இரு தொகுதிகளினதும் இடைத்தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் அமோகபெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளனர்

மின்னேரியாத் தொகுதி இடைத்தேர்தலில் ஐ தே. க வேட்பாளர் திரு. எஸ் பி விஜேக்கோன் 19,774 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இரண்டாவதாக ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி வேட்பாளர் திரு விஜயகுமாரணதுங் 10,668 வாக்குகளைப் பெற்றார்

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எல்லாசைஸ் திண்டுக்கல் இரும்புப்பெட்டிகளும் விற்பனைக்குண்டு. எவர் சில்வர் மாளிகை, நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 378

86 ஸ்ரீ தொடர் இலக்க Kawasaki (G.T.O.) மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: M. உமாகாந்தன், பொன்னையா ஒழுங்கை, ஆனைக்கோட்டை. 411

நல்ல நிலையிலுள்ள 125 யமகா 86 Sri 9898 உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு;- சந்திரமோகன், C/பா, வைத்திலிங்கம், கிறீஸ்தவ கல்லூரி முன்பாக கோப்பாய். 363

யாழ்ப்பாணம் இல. 9. 5ம் குறுக்குத் தெருவில் ½ பரப்பும் 2 குளிக் காணி விற்பனைக்கு உண்டு. யாழ். கன்னியர் மடத்திற்கு அருகாமையில். 361

நல்ல நிலையிலுள்ள 38 ஸ்ரீ Delica Van விற்பனைக்குண்டு. வேறு பெரிய வாகனங்களிற்கு மாற்றியும் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: க. ராஜதுரை, முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 429

நாலு பல வர்ண வைபர் கிளாஸ் (Fibre Glass) கதிரைகளும் நடு மேசையும் ரூபா 2300/- உடன் விற்பனைக்குண்டு. புதிய இலக்கம் 262, பழைய இலக்கம் 66, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 386

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக கடை அல்லது மில் கட்டக்கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். வி. நடராசா (அதிபர்), 'சிறுப்பர் வளவு'. கோண்டாவில் கிழக்கு, (பலாலி றேட் சந்திக்கு அருகாமையில்), கோண்டாவில் 421

கோப்பாய் வடக்கு சூசையப்பர் கோவிலடியில் 1¼ பரப்புக் காணியில் கீழ்மாடி (கடை) மேல் மாடி (குடியிருப்பு வசதிக் கட்டடம) கொண்ட கட்டடம் (மின்சார, கிணறு, மலசலகூட வசதியுடன்) விற்பனைக்குண்டு தொடர்பு: செல்லர் கந்தசாமி, சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 436

முருங்கன் நாவுட்டான் பிரதான வீதி அருகாமையில் கஸ்மீர் கமம் 6½ ஏக்கர் பின்புறம் நாவுட்டான் குளம், குழாய் கிணற்றுடன் வீடு கட்ட மேட்டு நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 154, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 438

நடமாடும் கல்யாணக் கொட்டகை 16x40 அடி, கதிரைகள், வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர். 441

Lister லையிற் என்ஜின் உட்பட ஐஸ் பழப் பெட்டி, பிளான்ட் (Plant) ஐஸ்பழ வான் இவைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 91(149), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 442

## விற்பனைக்கு

நல்ல நிலையில் முதல் உரிமையாளரின் Vespa 150 Super ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: S. குமார், 204, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 443

எம்முடைய பாவிப்பிலுள்ள 27 ஸ்ரீ 2000 and 33 ஸ்ரீ 9000 இலக்கத் தொடர்புள்ள Morris Diesel and Bedford Petrol வான்கள் உடன் விற்பனைக்குண்டு. 29-10-84க்குப் பின் தொடர்புகொள்க: முகாமையாளர், Autos Ltd, 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 453

## தேவை

ஊதுபத்தி, பற்பொடி, வாசனைத் தைலங்கள் ஆகிய பல சிறு கைத்தொழில் தெரிந்த ஒருவருக்கு பங்காளர் அல்லது தொழில் முறைகளைக் கற்க விரும்புபவர்கள் தேவை. தொடர்பு: சி. மகாதேவன், 18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 431

அச்சுக் கூடத்தில் சக வேலைகளையும் செய்யக்கூடிய பிளேட்டின்மெஷின்மைண்டர்தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். அன்பு அச்சகம், 248/5, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 434

## குத்தகைக்கு

கரவெட்டி சாமியன் அரசடிச் சந்திக்கருகாமையில் பிரதான வீதியில் அமைந்திருக்கும் அரிசி ஆலை குத்தகைக்கு கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். வ. நடராசா, (அதிபர்), 'சிறுப்பர் வளவு', கோண்டாவில் கிழக்கு (பலாலி றேட் சந்திக்கருகாமையில்), கோண்டாவில். 422

## காணவில்லை

நடா என்று அழைக்கப்படும் நடராஜா என்னும் சிறுவனைக் காணவில்லை கடைசியாகக் கறுப்பு நிற காற்சட்டையும், நீலநிற டீசேர்ட்டும் அணிந்திருந்தார். அவர் இருந்த இடம் கோண்டாவில் மேற்கு, முத்தெட்டு மடலேன், வயது 10, உயரம் 4 அடி. நிறம்: கறுப்பு. இவர் இருக்கும் இடத்தை அறிவிப்பவர்களுக்கு அல்லது கூட்டிக்கொண்டு வந்துகொடுப்பவர்களுக்கு தகுந்தசன்மானம் வழங்கப்படும். விலாசம்: சிங்கம்ஸ் பார்மஸி, 25, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 428

## கல்வி

பின்வரும் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டது. மேலும் எழுத்துமூலமான விண்ணப்பங்கள் 7-12-84 வரை ஏற்றுக் கொள்ளப்படும். Chartered Licentiate, I.C.M.A Quantity Surveying, C.E.I Diploma in Draughtsmanship இலெக்ரிக்கல் வயரிங், கொம்பியூட்டர் புறோகிறாமிங் Basic Electronic Course Air Conditioning 15-11-84ல் ஆரம்பம்: நிர்வாக அதிகாரி, சிவாகி பல்தொழில்நுட்ப நிறுவனம், தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி, மூனுமலை வீதி, மானிப்பாயிலும் இதே வகுப்புகள் நடைபெறுகின்றது. 427

## வாடகைக்கு

151-ம்இலக்கம் கஸ்தூரியார் வீதியிலுள்ள இரத்தினம் கட்டடத்தில் (லக்சலா மேல்மாடி) 1000 ச.அடியில் சகல வசதிகளுடன் அலுவலகத்திற்குகந்த இடமும், அதன் கீழ் உள்ள இரண்டு கடைகளும் உடனடியாக வாடகைக்கு விடப்படும். தொடர்பு இ. நீலகண்டன், 699/2, கே. கே, எஸ். வீதி, தொ. இல: 23610, யாழ்ப்பாணம். 432

## WANTED

Wanted experienced conductor coconut estate. Veddukadu, Punakari. Salary negotiable. Contact: 40, Rakka Lane, Chundikuli, Jaffna. 409

Wanted small car in excellent condition A 30, A 35, Ford Escort, Toyota (coralla) Sabaratnam, 40, Rakka Lane, Chundikuli Jaffna. Telephone: 23164 418

## ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி திரு. தி. க. பெரியதம்பி அவர்களிடம் 15-08-1982 முதல் 24-10-1983வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 14-11 1984காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து என்னால் விற்கப்படும்.

வி.செ.குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனையாளர்.
643, கே. கே. எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (383)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற இன்பருட்டி, விநாயகமூர்த்தி சிவானந்தம் என்பவர் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணசாதன
நியாயாதிக்க இல: T 1200

விநாயகமூர்த்தி சிவானந்தம்
— காலஞ்சென்றவர்

சிவானந்தம் கைம்பெண்
செல்வபாக்கியம்,
— மனுதார்

எதிராக

பராயமற்றவர்கள்
(1) சிவானந்தம் செழியன்,
(2) சிவானந்தம் இளம்பிறை.
பராயமற்றவர்களின்
பாதுகாவலர்
(3) கந்தையா செல்லத்தம்பி
எல்லோரும்
இன்பருட்டி, அல்வாய்
— எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்

க. சி. பாலகிருஷ்ணன்,
மனுதாரின் சட்டத்தரணி
436

## இன்று ஆரம்பம்
## A/L 85/86

சனி, ஞாயிறு வகுப்பு
2-00: காவிகள்
3-30: மீதித்தேற்றம்
ஆசிரியர்:
**Ravimohan,**
JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கும் பொருமாள் கோவிலுக்கும் இடையில்)
437

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி

மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரியைச் சேர்ந்த நுணுவில் கிழக்கு வேலுப்பிள்ளை கதிரித்தம்பி என்பவரின் மரணசாதனமெழுதப்படாத மரணச் சொத்துக்களின் விடயமாக

மரணமெய்தியவர்
கதிரித்தம்பி கைம்பெண்
நாகரத்தினம், நுணுவில்
கிழக்கு சாவகச்சேரி
மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல: 216

எதிராக

1. கதிரித்தம்பி மகேஸ்வரன்
2. கதிரித்தம்பி பரமேஸ்வரன் இருவரும் நுணுவில் கிழக்கு சாவகச்சேரி

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமெழுதப்படாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு ஐப்பசி
மாதம் 11/15 திகதி
என்னால் வரையப்பட்டது
ந. பாலகிருஷ்ணன்
மனுதாரின் சட்டத்தரணி
381

## இன்று சொக்கனின் நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டம் நடத்தும் பிரபல எழுத்தாளர் சொக்கன் எழுதிய 'தமிழ்ப் பேரன்பர் வித்துவான் க. வேந்தனார்' நூல் வெளியீட்டு விழா நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில், இன்று பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். இலக்கிய வட்டத் தலைவர் திரு. சசிபாரதி சு. சபாரத்தினம் தலைமையில், நடைபெறவுள்ளது. அரியாலையூர்க் கவிஞர் வே. ஐயாத்துரையின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகும். இவ்விழாவில், செம்பியன் செல்வன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். பேராசிரியர் க. சண்முகதாஸ், திரு. எஸ். சிவலிங்கராஜா, மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

## முதல்வருட நினைவஞ்சலி



அருட்சகோதரி
மேரி அலோசியஸ்
மலர்வு: 7- 1- 19'9
உதிர்வு: 27-10-1983

இறைவா, நீர் உம்முடைய திருவடிகளில் இணைத்துக் கொண்ட எங்கள் அருட் சகோதரி மேரி அலோசியஸ் அவர்களை உமது நித்திய பேரின்ப ஒளியினுள் சேர்த்து அவரது ஆன்மா மோட்ச பாக்கியத்தைச் சுகித்திருக்க அருள் கூர்ந்தருளும். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக சாவகச்சேரி புனிதலிகோரியார் தேவாலயத்தில் 27-10-1984 சனிக்கிழமை காலை 7மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சகோதரர்களும்,
பிள்ளைகளும்.
சண்முகம்வீதி,
சாவகச்சேரி. (451)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 11 — 1964



உதிர்வு: 07 — 11 — 1983

**செல்வி கணேஷானந்தி பாலசிங்கம்**

(யா / வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

அன்பின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த அன்புச்செல்வமே உமது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினரும், உறவினரும்.
145/1, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (447)

★ மாஸ்கோ

# ‘ஆதிக்குடிகள் எங்கேவாழ்ந்தார்கள்? 20 லட்சம் வருடங்களுக்குமுன்சைபீரியாவில் மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள்!’

மாஸ்கோ, அக். 29 உலகின் ஆதிக்குடிகள் கிழக்கு ஆபிரிக்காவிலேயே வாழ்ந்துவந்தன என்ற கருத்து தவருனதுஎன்பதை நிரூபிக்கக் கூடியவகையில், கிழக்குசைபீரியாவில், இருபது லட்சம் வருடங்களுக்குமுன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் இப்போது கண்டுபிக்கப்பட்டுள்ளன. மாஸ்கோ பத்திரிகையொன்று நேற்று வெளியிட்டுள்ளசெய்தியில், 1500க்கு மேலான கல்லாயுதங்கள் ‘யக்கோட்டியா’ என்ற இடத்துக்கு அருகில் உள்ள கிராமமொன்றில் பனிக்கட்டியில் உறைந்து கிடந்தது கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை ஆதிக்குடிகளால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் என்று ஆய்வுகள் மூலம் இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் 15 லட்சத்துக்கும் 20 லட்சத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த ஆதிக்குடி மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்புக்குமுன்னர், ஆதிக்குடி மக்கள் கிழக்கு ஆபிரிக்காவிலேயே வாழ்ந்துவந்தார்கள் என்ற கருத்து நிலவி

(7-ம் பக்கம் பார்க்க)

## பாரத-சோவியத் விண்வெளி திரைப்படம்

(மாஸ்கோ)

பாரத - சோவியத் கூட்டு விண்வெளி ஆராய்ச்சி பற்றி ‘‘டாக்கு மெண்டரி’’ திரைப் படத்தை சோவியத் வெளியிட்டுள்ளது. பாரதத்தின் முதலாவது செயற்கைக் கோள் ‘ஆரியபட்டா’ செலுத்தப்பட்டதிலிருந்து விண்வெளிஆராய்ச்சியில் இரு நாடுகளுக்குமிடையே நிலவும் ஒத்துழைப்பை இந்தப்படம் விபரிக்கிறது.

தமிழ்நாடு

# எம். ஜி. ஆர் நிலைமையில் டாக்டர்களுக்கு திருப்தி!

(சென்னை)

கடந்த இருபத்திரண்டுநாட்களாக தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று நன்கு ஓய்வுஎடுத்துக் கொண்டார். அவரது பொதுவான நிலைமைடாக்டர்கள் குழுவுக்கு மிகவும் திருப்தியளிப்பதாக வைத்திய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. முதலமைச்சரைச் சிகிச்சைகாக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் பிரச்னைபற்றி டாக்டர்குழு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் ஹண்டே தெரிவித்தார்.

இந்திய ஜனதிபதி டாக்டர் ஜெயில்சிங் தொலைபேசிச் செய்தியொன்றில், எம். ஜி. ஆரின் நலனைவிசாரித்ததுடன் அவர் விரைவில் குணமடைய வாழ்த்திஞர்.

நியுயோர்க்

# “படைக்குறைப்பு பேச்சுகள்: தடங்கல்களை நீக்கவேண்டும்”

ஐ. நா. அக் 26 படைக்குறைப்பு பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்காக படிப்படியான ராஜிய முயற்சி தேவை என்று ஐ நா. தலைமைச் செயலாளர் ஏற்றுக்கொண்டார்.

ஐ. நா. வில் உலக படைக் குறைப்பு வாரத்தையொட்டி பேசிய அவர், படைக் குறைப்பை ஊக்கப்படுத்துதவற்காக குறிப்பான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளைக் கண்டறிய வேண்டுமெனக் கூறிஞர்.

ஆயுதக் குறைப்பு பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல்களை நீக்கி, அணு ஆயுத ஒப்பந்தத்திற்கு மீண்டும் வழி காண வேண்டுமென்றும், கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் வாடும்போது அடுத்தாண்டு பத்தாயிரம் கோடி டாலரை அணு ஆயுத

(7-ம் பக்கமும் பார்க்க)

பாக்தாத்

# 4 படைக்கப்பல்களை ஈராக் அழித்தது!

லண்டன், அக் 26 நேற்று வளைகுடா பகுதியில் நான்கு பெரிய படைக்கப்பல்களை தனது விமானப்படை தாக்கி அழித்து விட்டதாக ஈராக் கூறுகிறது

அந்தக் கப்பல்கள் ஈரானிய துறை முகத்தைச் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு கப்பல் அணியைச் சேர்ந்தவையாக செய்திகள் தெரிவிக்கின்றன

இந்தத் தாக்குதல் நடத்திய விமானங்கள் பத்திரமாகத் திரும்பிவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லி

# ஆடைமாற்றிக்கொள்ளக்கூட நேரமில்லை இந்திராவுக்கு

புதுடில்லி, அக் 25 ‘‘காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டு காரியாலயம் சென்று விடுவேன் பின்னர் இரவிலேயே வீடுதிரும்புவேன் நிலைமைஇப்படியிருக்க எனக்கு எங்கே தினம் 3தடவை உடை மாற்றிக் கொள்ள நேரம் கிடைக்கிறது?’’ என்றுபிரதமர் திருமதி இந்திராகாந்தி கேள்வி எழுப்பிஞர்.

இந்திரா காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இப்படிக்கேட்டார்

இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள். குறிப்பாக பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் திரு அடல் பிஹாரி வாஜ்பேய் பொதுக் கூட்ட மொன்றில் திருமதி காந்தி நாளொன்றுக்கு 3தடவை உடை மாற்றுகிறூர். ஆடம்பர வாழ்க்கையே அவரது குறிக்கோள். என்று கண்டித்திருந்தார்

இக்கண்டனம் இந்திய பத்திரிகைகள் பலவற்றைப் பெரிது கவர்ந்திருந்தது. திருமதி காந்தி எதிர்கட்சியினரின் இக் கண்டனம் குறித்து மேலும் கூறியதாவது: ‘‘அவர்களிடம் குறிப்பிட்டளவு தலைவர்களே உள்ளார்கள். பல தடவைகள் புதியகட்சிகளை உருவாக்குகிருர்கள். ஆனுல் அவைகளில் புதிய முகங்கள் தோன்றுவதில்லை.

[7-ம் பக்கம் பார்க்க]

## அமெரிக்க ஜனதிபதி

### ★ ‘‘பொய்யன், பொய்யன்’’

அமெரிக்க ஜனதிபதித் தேர்தல் பிரசாரங்கள் உச்சக் கட்டத்தில் சூடுபிடித்துள்ளன. ஜனதிபதி றீகனும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் வோல்டர் மொன்டேலும் வாக்குவேட்டை, மேடைப் பேச்சு என்று மாநிலத்துக்கு மாநிலம், நகரத்துக்கு நகரம் பறந்து திரிகின்றனர்.

போட்லண்டில் நடந்த பிரசாரக்கூட்டமொன்றில் றீகனின் உரையின்போது பலத்த கூச்சல்கள் குறுக்கிட்டன. ‘‘பொய்யன், பொய்யன், காற்சட்டைகள் தீப்பற்றிவிட்டன’’ என்று கூச்சலிட்டவர்கள் றீகனைக் கிண்டல் செய்தனர்.

திரு. றீகன் தனது கொள்கைகளைச் சரியென்று கூறியபாதெல்லாம் இந்தக் கூச்சல்கள் அவரை இடைமறித்தன. அப்போது அவர் குறும்பாக; ‘‘இப்படிக் கூச்சலிட்டால் திரு. மொன்டேலை அவர் கூறியபடி வரிகளை உயர்த்த வாய்ப்பளித்துவிடுவேன்’’ என்று கூட்டத்தவரை எச்சரித்தார்.

### ★ ஜனநாயகக் கட்சிக்காரர்கள் இறப்பார்கள்

‘‘ஜனதிபதியாகத் தெரிவாகும் ஜனநாயகக்கட்சிக்காரர்கள் இறந்துவிடுவார்கள் பிராங்ளின்ரூஸ்வெல்ட், ஹரிட்ரூமன், ஜோன். எவ். கெனடி ஆகியோர் ஜனதிபதியாகி பதவிக்காலத்தில் இறந்தவர்களாவர்.’’ இப்படி தற்போதைய ஜனதிபதியும், குடியரசுக்கட்சி வேட்பாளருமான திரு. றீகன் தமது பிரசாரங்களில் பேசி வருகிருர் என்று திரு. மொன்டேல் யங்ஸ்டவுன் என்ற இடத்தில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் கவலை தெரிவித்தார்.

தாமும் ஜனநாயகக்கட்சி வேட்பாளராதலால் தமது முன்னையவர்களான கெனடி போன்ருேரை கடுமையாக விமர்சிப்பதை தம்மால் ஏற்கமுடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தேர்தல் செய்திகள்


Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பிஞன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.

நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

★ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
★ T. V. மேசை,
★ தண்ணீர்த் தாங்கி,
★ WASH BASIN,
★ TEAPOYS, ★ CENTRE TABLE,
★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

TRADE CENTRE,
ஹோம் பிஞன்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA
Attractive fares to European Countries U. S. A., Canada and Australia

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8 30 முதல் 4.30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30

★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

மக்கிஞேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154



UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ் - 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

### மணிவாக்கு

இராணுவத்தில் சேருமுன் ஒருமுறையும், விமானத்தில் ஏறுமுன் இரண்டு முறையும், கடவுளைக் கடைசியாக பிரார்த்தனை செய்துகொள்.

—ரஷ்யப்பழமொழி

## நமதுநோக்கு

# சுகம்பலம்பெற்றஜனநாயகம்?

மின்னேரியா, குண்டசாலை இடைத் தேர்தல்கள் முடிவு ஏற்கனவே தெரிந்த விடயம்.

நாடகத்தில் கேலிக்கூத்துக்கு, இடமளித்த சட்டத்தையும் நாம் ரசிக்கின்றோம்.

அரசியல் நுணுக்கங்களை ஆராயும் ஆராய்ச்சி வல்லுநருக்கு நேற்று வெளிவந்த முடிவுகள் பயன்படும்.

எம் போன்ற சாதாரண பிரஜைகளுக்கு இதனால் என்னபயன்?

மாணவர்கள் முதல், இடை, கடை என்று பிரிக்கப்பட்டது பழைய முறை.

இன்று தேர்தல்களையும் முதல், இடை, கடை என்று பிரிப்பது பொருத்தம் போல தெரிகிறது.

இன்று முடிவடைந்த இடைத் தேர்தல்கள் சாதாரண முறையில் நடைபெறும் தேர்தல்கள் அல்ல. எத்தனை வெற்றிடங்களுக்கு தேர்தல் நடைபெறவில்லையென்பதைக் கணித்தால் இவ்விரண்டுக்கும் உரிய விசேட காரணமென்ன?

நாட்டிலும் வெளி உலகிலும் ஏழு வருடங்களுக்கு முன் பதவிக்கு வந்த ஆட்சி பொதுத் தேர்தலின்றி 'பொதுஜன வாக்கெடுப்பு' என்ற புருடாவில் தொடர்கிறது என்ற வசை பேசப்பட்டு வருகிறது.

சென்ற வருடம் 'நம்பிக்கையாக பொதுத் தேர்தல் நடத்தப்படும்' என்ற ஜனாதிபதியின் வாக்குறுதி சடுதியாக நிராகரிக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் நடந்தால் அடக்கமுடியாதகுழப்பங்களை 'நக்ஸலைட்டுகள்' உண்டாக்குவாரென்ற காரணம் காட்டப்பட்டுத் தேர்தல் நிறுத்தப்பட்டது.

இவர்கள் யார்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்க்கும் சக்தியுடைய ஒரு இயக்கம். இதனை மக்கள் அறிந்திருக்கவில்லை. சாதாரணமாக இடம் பெறும்கலவரங்களே கடந்த காலத்தில் இடம்பெற்றன. எனவே இந்தக் காரணம் ஒரு நொண்டிச்சாட்டென்பதை ஆளும் கட்சியைவிட மற்றைய கட்சிகள், பொது மக்கள் புரிந்துகொண்டனர்.

அக்காலம்தொட்டு இன்று வரைக்கும் ஜனநாயக ஆட்சியில் தொடர்பாக அவசர காலச் சட்டம், மக்கள் சுதந்திரத்திற்கு பாதகமான 'பயங்கரவாத தடைச் சட்டம்' நாட்டின் பொதுவாழ்வில் என்னென்ன அனர்த்தங்களை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை அறியாதவர் எவருமில்லை.

எனவே பொதுத் தேர்தலில் ஏற்படக்கூடிய கொடுமைகளிலும் கூடிய கொடுமைகள் இன்று நாட்டில் தினசரி நிகழ்ச்சிகளாய்விட்டன.

இந்தக் குழப்ப நிலையிலும் இவ்விரு இடைத்தேர்தல்கள் அமைதியாக நடைபெற்றது ஒரு நல்ல செய்தியென்பதை நாம் பாராட்டுகிறோம்.

சற்றே ஆழமாகச் சிந்தித்தால், இன்று எதிர்க்கட்சிகள் பலம்குன்றி வாடுகின்றன. வேட்பாளர்கள் வீண் பேச்சுக்கள் எவ்வாறாயினும் ஆளும் கட்சிக்கே இவ்விரு தொகுதிகளிலும் ஆதரவுண்டென்பதால் தேர்தல் நடைபெற்றது. அதுவும் அமைதியாக என்பதில் வியப்பில்லை.

பொதுத்தேர்தல் நடத்தத் தயங்கிய அரசு, தேர்தலில் தோல்வியென்ற செய்தியை அதன் அகராதியிலிருந்து விலக்கிவிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி பிலிப்பைன்ஸ் பற்றிக் குறிப்பிட்டது எங்கள் நாட்டுக்கு ஓரளவிற்குப் பொருந்தும். மாக்கோஸ் அரசாங்கத்தில் ஜனநாயகத்துக்கு இரண்டொரு சிறு குறைகள் உண்டு. அவற்றை பழுதுபார்த்துவிடுவது அவசியம்; இன்றேல் மாக்ஸிய வாதிகள் நாட்டைக் கைப்பற்றிவிடுவார்கள்'' என்பது றீகனின் கருத்து.

இன்று இரண்டாவது நாளாக கொழும்பில் நடைபெறும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அமெரிக்க தூதர்களின் மாநாடு இலங்கையில் ஜனநாயகம் சுகம் பலம் பெற்றிருப்பதாக நினைக்க இன்றைய இந வெற்றிகள் உதவும்.

சிந்திக்கும் ஆற்றல் அற்ற மக்களே இவ்வித பிரசாரத்தால் ஏமாற்றப்படுவார்.

மின்னேரியா அங்கு வதியும் கமக்காரரின் அரண். இன்று அங்கு சிறிலங்கா மக்கள்கட்சி இரண்டாம் இடம் எடுத்திருப்பது மக்கள் மனமாற்றமடையவல்லதென்பதை விளக்குகிறது.

அது என்னவானாலும் நாட்டின் முக்கிய பிரச்னையாகிய தமிழர் பிரச்னைக்கு தேர்தல்கள் எதுவும் உதவா— முதல், இடை, கடை.

எனவே கடைத் தேர்தலைக் காத்திராது அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழப்பதை உடனடியாகத் தடுக்கவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தாமதமின்றித் தீர்த்துவைக்கவும் ஆட்சிக்கு அரசியல் ஞானம் வேண்டும்.

அடுத்த தேர்தலை செயற்படுத்தும் அரசியல் தந்திரத்துக்கும் அதனைக் காத்திருக்கும் அரசியல்வாதிகளுக்கும் தமிழ்ப் பிரதேசங்களில் இடமில்லையென்பது உறுதியாய்விட்டது.

## மூன்று நாள் பயிற்சி வகுப்பு

[சாவகச்சேரி]

1985ம் ஆண்டு 1ம் வருடத்தில் படிக்க இருக்கும் மாணவர்களுக்கு கற்பிக்க இருக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் கால மூன்று நாள் பயிற்சி வகுப்பு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமானது இப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து திரு .கந்தசாமி பேசுகையில் பத்து வருடங்களுக்கு முன் 1ம் வருடம் படித்த மாணவனிலும் பார்க்க தற்பொழுது 1ம் வருடத்தில்

[5ம் பக்கம் பார்க்க]

# பிதா பீட்டர்பிள்ளை விருதும்; விருதுபெற்ற பெருமகனும்

சமூக சேவைகளுக்கான 83-ம் ஆண்டுக்குரிய பீட்டர் பிள்ளை மன்ற விருது (Peter Pillai Foundation Award பிரபல ராணி அப்புக்காத்து திரு. சோமசுந்தரம் நடேசன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூக நீதியை வளர்த்தல் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காகத் தம்மை அர்ப்பணித்த பிதா பீட்டர் பிள்ளையின் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்ட இந்த விருது மேற்சொன்ன துறைகளில் சிறந்த சேவையாற்றியவர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது.

துரித மாற்றங்களுக்குள்ளாகிவரும் இன்றைய சமுதாயத்தில் சமூக நீதி, மனித உரிமைகள், சிறுபான்மை மக்களின் உரிமைகள், தனிநபர் உரிமைகள் ஆகிய பல்வேறு துறைகளில் தம்மை ஈடுபடுத்திச் செயல்பட்டுவருவதற்காகவே இந்த உயர் விருது திரு. நடேசன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

1904-ம் ஆண்டு பிறந்த நடேசன் அவர்கள் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு றோயல் கல்லூரி, பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றிலும் தமது உயர் கல்வியைப் பெற்றார்.

1932-ல் இலங்கை உயர் நீதிமன்ற வழக்குரைஞராகப் பிரமாணம் எடுத்துக்கொண்ட அவர் 1954-ம் ஆண்டு ராணி அப்புக்காத்தானார்.

1947-ல் செனட் சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட இவர், இடையில் இரண்டு வருடங்கள் தவிர 71-ம் ஆண்டு செனட் சபை ஒழிக்கப்படும்வரை அப்பதவியை வகித்தார்.

இந்திய தோட்டத்தொழிலாளர் பிரச்னை தமிழ்மொழிப் பிரச்னை சிறுபான்மையோர் விவகாரம் தொடர்பாக அவர் துறைபோக ஆராய்ந்து செனட் சபையில் நிகழ்த்திய உரைகள் மிகமுக்கியமானவை நிலையான பயனளிக்கக்கூடியனவுமாகும். ஏனைய மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களிலும் அரசியல் அமைப்புத் தொடர்பாகவும் அவர் ஆற்றிய உரைகளும் அத்தன்மையானதே.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் சட்டத்தை வரைந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் உறுப்பினராகக் கடமையாற்றிய இவர், இவ்விவகாரம் தொடர்பான நீதி அதிகாரத்தை நீதித்துறையே செயல்படுத்தவேண்டும் எனத் தெரிவித்த கருத்தை மேற்படி தெரிவுக்குழு ஏற்றுக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறித்த மசோதாவை அப்போதைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலை சபையில் சமர்ப்பித்தபோது திரு. நடேசனை வெகுவாகப் பாராட்டிப் பேசியிருந்தார்.

69-ம் ஆண்டில் இவர் சட்டத்தரணிகள் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்- பிரஜை ஒருவர் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு மனுசெய்வதற்கான உரிமை 72-ம் ஆண்டு அரசியல் சட்டத்தில் புகுத்தப்பட்டமை இவரது தலைமைக் காலத்தில் இச்சபை நிகழ்த்திய சாதனைகளில் ஒன்ருகும்.

மனித உரிமைகள் விடயங்கள் எல்லாவற்றிலுமே நடேசன் அவர்களின் பெயர் என்றும் தொடர்புள்ளதாகவே இருக்கும். 71-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான இவர், சிவில் வழக்குகளிலும் மனிதஉரிமைகளை நிலைநாட்டுவதில் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரும் பின்னரும் போராடிவந்திருக்கிறார்.

குற்றவியல் வழக்குகள் சிவில்.வழக்குகள் மற்றும், அரசியல் சட்டப் பிரச்னைகள், கைத்தொழில்,தொழிற்சங்கத் தகராறுகள் போன்றவற்றில் மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் அவர் முன்னின்று உழைத்து வந்துள்ளார்.

பத்திரிகைச் சட்டத்திற்கு எதிராக ஜனநாயக உரிமைகளுக்காக இயக்கத்தில் சட்டத்தரணிகள் குழுவை முன்னின்று வழிநடத்தினர்.

பராளுமன்ற உரிமைகள் தொடர்பான புதிய திருத்த சட்டத்தை ஆராய்ந்தார்' பிரபலமான 'ஒப்சேவர்' பத்திரிகை வழக்கில் நீதி அதிகாரத்தை பராளுமன்றம் செயற்படுத்துவது தொடர்பான பகுப்பாய்வு ஒன்றை எழுதினார். இதை எழுதியமைக்காக அவரே நீதிமன்றத்தில் நிற்க வேண்டி ஏற்பட்டது. பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறினார் என்ற குற்றச் சாட்டின் மீது உயர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுதலை பெற்றார். இந்த வழக்கு அவருக்கு சர்வதேச மட்டத்தில் பிரபலமாக்கியது. சர்வதேச சட்ட வல்லுனர்கள் ஆணைக்குழு (Thc international Commission off Jurits) இந்த வழக்கை அவதானிப்பதற்காக புகழ்பெற்ற ராணி வழக்குரைஞரான ஹூஸன் [Hooson) பிரபுவை அனுப்பிவைத்தது.

(5ம் பக்கம் பார்க்க)

# வேந்தனர் தமிழ்ப்பணிக்கு இன்று நன்றித்திருநாள்

பிரபல எழுத்தாளர் 'சொக்கன்' எழுதிய 'தமிழ்ப் பேரன்பர் வித்துவான் வேந்தனர்' என்னும் வாழ்க்கை—வரலாற்று விமர்சன—ஆய்வு நூலை யாழ் இலக்கிய வட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லைஆதீன மண்டபத்தில் வெளியிட்டு வைக்கிறது.

மேற்படி நூலின் சிலபகுதிகளை வாசகர்களுக்கு தொட்டுச் சுவைபார்க்க வழங்குகிறோம்.

'...நாம் எங்கள் அன்னைமொழியின் இன்னலை வெறும் வாய்ச் சொல்லால் போக்க முடியாது. பல ஆண்டுகள் தொடர்ந்து போராற்றவேண்டிய நெருக்கடிகள் ஏற்படலாம். அந்த நெருக்கடிகளைக் கண்டு மனம் தளர்ந்தால் உரிமைப் போரில் பின்னடைய வேண்டி வரும். என்ன துன்பம் அடுத்தடுத்து வந்தாலும் அவற்றை எல்லாம் ஏற்கக் கூடிய மனநிலை நமக்கு வேண்டும். பசித்துன்பம், சிறைத் துன்பம், பதவிநீக்கத் துன்பம் முதலான பல துன்பங்களையும் தாங்கி, எங்கள் அன்னைமொழியின் இன்னலைப் போக்குவோம் என்ற மான உணர்ச்சி எமக்கு தோன்றிவிட்டால் வெற்றிமிக விரைவிற் கிட்டிவிடும்என்றேகூறலாம். தன்னம்பிக்கையும் தளரா உழைப்பும் உடையவர்களின் உரிமைகளை எவராலும் பறித்துக்கொள்ளமுடியாது இன்று தமிழ்மக்களிடத்தில் தோன்றியுள்ள விழிப்புணர்ச்சி இனிவரும் புதிய உரிமைத் தமிழகத்தைப் படைத்துவிடுமென்றே கூறலாம் நெருக்கடியைக் கண்டு நெஞ்சம் தளராமல் போராடத் துணியுங்கள். உங்கள் வருங்கால மரபினருக்கு வாழ வழிவகுத்து விடுங்கள். தமிழ் மொழியின் தெய்வச்சாயலும், பொருள் மரபும் நீண்டகாலம் நிலைபெறும். எம்மைக் காப்பாற்றி வாழ்வளிக்கும் என்ற துணிவுடன் போரைத் தொடங்குவோம்...'

(பக்கம் — 49 - வேந்தனரின் கட்டுரையிலிருந்து—1956

அன்னை தரும் முலைப்பாலும்
தூயதாக
அமையாதேல் அருந்தும்
பிள்ளைக்
இன்னல்தரும் என்றுணர்
வோம் இலக்கியத்தைப்
படைத்திருந்தால் இனிய
தூய
கன்னல் தரும் சுவை
மொழியாய்த் தமிழ்மரபு
கடக்காமல் கவின யாத்துத்
தொண்மை நிலைச் செந்
தமிழே—எங்கள் திரு
எனுஞ் சிறப்பைத் துலங்க
வைப்போம்.

என்று தமிழ் மரபு கடக்காத செய்யுளாக்கத்திற்குப் பள்ளியெழுச்சி பாடிய புலவர்,

பாடுகின்றோர் எல்லோருங்
கவிஞரல்லர்
பாட்டென்றூற் பண்டி
தர்க்கே உரிமையல்ல
ஓடுகின்ற பெருவெள்ளப்
பெருக்கே போல
உணர்ச்சியிலே ஊற்றெழுந்த
ஒளியால் ஓங்கி

(5ம் பக்கம் பார்க்க)

செம்பியன் செல்வன்

## வேலவா! குறை தீரையா!

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

குன்றமெல்லாங்குடி கொண்டவா
குன்றுருவவேல்வாங்கி நின்றவா — (குன்ற)

அனுபல்லவி

கன்றிழந்தாப்பேபற் கசிந்துருகுங் குருபரர்க்கு
நெஞ்சினினீ நினைந்தே செந்தமிழைப்
பாடவைத்தாய் (குன்ற)

சரணம்

சித்திகள் மிக அருளுந்தேவ சேனதிபதியே
பக்தியுடன் புகழைப்பாட விசையருள்வாய்
முத்தைத்தரு அடிகொடுத்தே முன்பருண
கிரிக்கருள்வாய்
சித்தமது கண்டேனையா திருநீர்வைப்பதியழகா
(குன்ற)

— முருகதாசன்

[நீர்வேலி கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவம் 4-ம் நாள் இன்று]

# "தமிழகத்தலைவர்கள் அனைவரும் நலமுடன்வாழ பிரார்த்திக்கவும்"

## கூட்டணித் தலைவர் கோரிக்கை

(கரவெட்டி)

''ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் சுகத்துடன் பல காலம் வாழ எமது இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், தமிழக முதல்வர் எம். ஜி ஆர். பூரணசுகம் பெறவேண்டி கரணவாய் கலட்டிப் பிள்ளையார் கோவிலில் பிரார்த்தனையும், முழு நாள் உண்ணுவிரதமும் மேற்கொள்ளப்பட்டபோது அதனை முடித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தாய்மார், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கதிகமானோர் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் வள்ளுவன் சனசமூகநிலையத் தலைவர் திரு. தா. சதாசிவம் தொடக்கி வைத்தார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர் செய்தபணி சொல்லித்தெரிய வேண்டியவையல்ல. கடந்த ஜூலைக் கலவரத்தின்போது தமிழகத்தில் உடனடியாக சர்வகட்சித் தலைவர்கள் மாநாட்டைக்கூட்டி டெல்லிசென்று அதன்மூலம் இங்கு நரசிம்மராவை அனுப்பி கலவரத்தை நிறுத்தியவர் அவரே. அத்துடன் நம்மவர்களுக்கு அங்கு பலவித உதவிகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்தவர் அவர்.

''அவர் சுகம்பெற ஈழத்தில் மட்டுமல்ல தமிழகம் எங்கும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

ஈழத் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் எம் ஜி ஆர் மட்டுமல்ல, தமிழகத் தலைவர்கள் அனைவருமே பூரண சுகத்துடன் திகழ இறைவன் நல்லருள் புரிய நாம் பிரார்த்திக்க வேண்டும்.''

## இன்று திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினுல் நுணுவிலில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு இல்லத் திறப்பு விழா இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பரும் கௌரவ விருந்தினராக நீதிபதி ந.யோகசிகாமணியும் பங்கு கொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. கே. சிவஞானசுந்தரத்தின் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்.

★

(மாவிட்டபுரம்)

மாவை கலைப்பெருமன்றத்தினதும், சனசமூக நிலையத்தினதும் திறப்புவிழா இன்றுநடைபெறவிருக்கிறது.

சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் புலவர் ம. பார்வதிநாதசிவம் ஆசியுரை வழங்குவார்.

# இராமநாதன் கல்லூரி

## சுகாதார உணவு தினவிழா

(மானிப்பாய்)

சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியில் சுகாதார விழாவும், உணவு தினவிழாவும் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு கல்லூரி அதிபர் டி. சச்சிதானந்தம் தலைமை தாங்கினுர். பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட இளைப்பாறிய சுகாதார அத்தியட்சகர் திரு எஸ். ராஜரட்ணம், டாக்டர் செல்வி எஸ். பொன்னுத்துரை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவிகள் நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் 'தண்டனை' என்ற கீழ்ப்பிரிவு மாணவிகளது நாடகமும், 'புத்தி வந்தது' என்ற மேற்பிரிவு மாணவிகளது கவிதை நாடகமும் நடைபெற்றன. புத்தி வந்தது என்ற இந்தநாடகத்தை ஆசிரியர் ஆ. கல்யாண சுந்தரேசன் எழுதியிருந்தார். துணை அதிபர்களுள்ஒருவரான திருமதி எஸ் ஜே. சுந்தரேசன் இந்த நாடகத்தை சிறப்பாகத் தயாரித்திருந்தார் விழா நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் பொறுப்பாளராகவும், அமைப்பாளராகவும் திருமதி சுந்தரேசன் கடமையாற்றினுர்.

## மூன்று நாள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கும் மாணவன் ஆற்றல்களிலும் பலஆராய்ச்சித்துறைகளிலும் அறிவு கூடியவன் என்று கூறி திருத்தப்பட்ட பாடத் திட்டத்தை ஆசிரியர்களுக்கு சிறந்த முறையில் விரிவுரை நடாத்தினுர்.

மற்றும் திருமதி.முருகையா திருமதி .யோகநாதன் ஆகியோரும் விரிவுரை நடாத்திஞர்கள் இறுதியில் சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சோமசுந்தரம் பேசுகையில் ஆசிரியர்கள் அனைவரும் உற்சாகமான முறையில் விரிவுரைகளைக் கவனிப்பதைப் பார்த்துப்டுபாராட்க்கள் தெரிவித்தார். தொடர்ந்து இச் சேவைக்காலப் பயிற்சி கருத்தரங்கு நேற்றும்இன்றும்நடைபெற்றது.


WANTED

Car in Good Condition Required. Immediate Payment No Brokers please - JEGENDRAN, 96, Ambalavanar Road, Athiady, Jaffna. Phone: 24398 [457]


## பிதா பீட்டர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் கலவான தொகுதியை இரு உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப் படுத்தலாமென்ற பிரச்னை எழுந்தபோது ஜனநாயக உரிமைகள் இயக்கத்தின் சார்பில் நீதிமன்றத்தில் திரு. நடேசன் அவர்கள் ஆஜராகி வாதாடினுர். இரு உறுப்பினர்களில் ஒருவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவராகவும் மற்றவர் கட்சி ஒன்றின் நியமனம்பெற்றவராகவும் இருக்கும்பட்சத்தில் அது மக்களின் வாக்களிக்கும் உரிமையில் தலையிடுவதாக இருக்கும் என்றும், எனவே இது விடயத்தில் சர்வசனவாக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்றும் இவர் வாதிட்டதன் விளைவாக அரசியல்அமைப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட இருந்த திருத்தம் வாபஸ் பெறப்பட்டது.

உடலாலும் உள்ளத்தாலும் வலிமை பொருந்திய அதி சிறந்த அறிஞரான நடேசன் அவர்கள் பெரும் உழைப்பாளி மட்டுமல்ல, எதையும் நிலைத்து நின்று சாதிக்கும் வல்லமையுளளவர். அவரது இந்தக் குணங்களே சமூகநீதிக்காகவும் மக்கள் உரிமைகளுக்காகவும் வாழ்க்கை முழுவதுமே பணியாற்றவைத்தன.

## வேந்தனுர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வாடுகின்ற மக்களினம்  
மகிழ்ச்சி கொள்ள  
மறுமலர்ச்சிப் பெரு  
வாழ்வை வழக்குமாற்றல்  
கூடுகின்ற கொள்கையினுல்  
எழுச்சி கொண்டு  
குமுறுகின்ற கோளரியே  
கவிஞ ஞவான்,

என்றும் பாடியுள்ளமை முரண்போலத் தோன்றினுலும் உண்மையிலே முரணன்று

(—பக்கம் 17)

—தீர்க தரிசியாக இன்று சமூகவியல் குழந்தை உளவியல், இலக்கணவியல், காப்பியவியல் போன்ற துறைகள் தழுவிய பல படைப்புகளை வெளியிட்டு, தமிழர்தம் உள்ளத்தே நீங்கா இடம் பிடித்துக் கொண்ட வேந்தனுர்— தமிழ்பணிக்கு ஒரு இன்று நன்றித் திருநாள்.

## சிமெந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றையும் இக் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றனர். இப் பொருட்களின் மொத்தப் பெறுமதி சுமார் நாலரை லட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## பெரும்தாக்குதல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என என்று பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தெரிவித்தார்.

திரு. வின்சன்ட்பெரேரா நேற்றுப்பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

''வடக்கு, கிழக்குப்பகுதிகளில் பயங்கரவாதிகள் அரசாங்கஅலுவலக உபகரணங்களைக் கொள்ளையிடுவதிலேயே கடந்த மாதத்தில் கூடுதல் கவனம்செலுத்தினர்.

''அவர்களின் இத்தகைய நடவடிக்கைகள் பெருமளவிலான தாக்குதல் ஒன்றுக்கு அவர்கள்தம்மைத் தயாராக்கிக்கொள்வதையே காட்டுகின்றன '' என்ருர்.

## எம். ஜி. ஆர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### மீண்டும் முதல்வராக ....

''பல ஆண்டுகள் வாழவேண்டும் என்றும், மீண்டும் முதல்வராக எம் ஜி ராமச்சந்திரனே வந்து ஈழத்தமிழ் மக்களுக்கு முன்புபோன்று வீரமுடன் சிறப்பான தொண்டாற்ற வேண்டுமென்றும் தொடர்ந்து பிரார்த்திப்போம்'' என்ருர்.

கூட்டணி நிர்வாகச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில்: 83-ம் ஆண்டுக் கலவரத்தின் பின் தமிழகம் சென்ற ஈழத்தமிழர்களை அன்புடன் அணைத்ததுடன் அவர்கள் துன்பத்தைப்போக்கத் துடிதுடிப்புடன் நடவடிக்கை எடுத்தவர் தமிழக முதல்வர் என்றும் ஈழத்தமிழ் மக்கள் வாழ்வு சிறக்க அவர் பூரண சுகமடையப் பிரார்த்திப்போம்'' என்று கூறினுர்.

தவில், நாதஸ்வர இசைப் பிரார்த்தனையும், வயலின் பக்திப் பாடல்கள் பிரார்த்தனையும் இடம்பெற்றது. அகில இலங்கை அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பொன். மதிமுகராசா மற்றும் தொண்டர்கள், பிரமுகர்கள்சர்வகட்சியினர் இப்பிரார்த்தனையில் பங்கு பற்றினுர்கள்.

## ஆயுதப்படையின..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினமிரவு ஆயுதப்படையினர், குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தினர்.

ஒரு குடிசை மீது சந்தேகத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற போது, தப்பியோட முயன்ற நாதன் எனும் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டாராம்.

இதனைத் தொடர்ந்த மேற்படி குடிசை சோதனைக்குள்ளான போது, கிளிநொச்சி நீதிமன்றத்தில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும்பல சைக்கிள்கள், மணிக்கூடுகள் தொலைபேசிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இளைஞரின் சடலம் கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் ஆயுதப்படையினரால் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில், சிகப்பு நிறக்காரில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் ஆஸ்பத்திரிபிரேதச்சாலைக்குள் சென்று அங்குள்ளவர்களைப் பயமுறுத்தி, இளைஞரின் சடலத்தைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இளைஞர்கள் தங்கியிருந்த குடிசை தீக்கிரையாகியுள்ளது.

### கார் கடத்தல்

இது இவ்வாறிருக்க நேற்றுக் காலை வெள்ளைநிறக் கார் ஒன்று கிளிநொச்சியில் இனம் தெரியாத நபர்களினுல் கடத்தப்பட்டுள்ளது.

## அவசரகாலச் சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம்மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## எம்- ஜி- ஆர்- நலம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவ, மாணவிகள் நேற்றுக் காலை ஊர்வலம் நடத்தி, பிரார்த்தனையிலும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாணவர் பேரவையினுல் ஒழுங்குசெய்யப்பட்ட மாணவர் ஊர்வலம், மிகவும் உணர்ச்சிகொண்டதாகவும், மாணவர்கள் கிளிநொச்சி நகர்கந்தசுவாமி கோவிலில் நடத்திய பிரார்த்தனை பக்திபூர்வமானதாகவும் அமைந்திருந்தது

நகர்ஊடாக சுமார் இரண்டு மைல்தூரம்வரை மாணவர்கள் ஊர்வலம் நடத்தினர்.

## ஜனநாயகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற அமெரிக்காவின் புதிய தூதரக கட்டிடத்திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

அமெரிக்காவின் துணைவெளி நாட்டமைச்சர் திரு. றிச்சார்ட் மேர்பி இவ்வைபவத்தில் பேசுகையில்-:

''இலங்கையிலோ உலகின் வேறெந்த இடத்திலோ இராணுவத் தளங்களை அமைக்க அமெரிக்கா முயலவில்லை'' என்றுகூறினுர்.

## மலையக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் வருகிருர்கள்'' என்று அத்தனகலை எம்.பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினுர்.

கடற்படைக்கென மூன்று கப்பல்களை வாங்குவதற்கு 3 கோடியே 45 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்குவதற்கான குறை நிரப்புப் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் பேசிக் கொண்டிருந்த போது சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து குறுக்கிட்டு ''பயங்கரவாதிகள் எங்கிருந்து வருகிருர்கள். இந்தியாவில் இல்லையா'' என்ருர்.

லக்ஷ்மன்: ''இந்தியா விலிருந்து மட்டும் வரவில்லை''

ரஞ்சித்: ''வருகிருர்களா இல்லையா''

லக்ஷ்மன்: ''நட்பு நாடுகளிலிருந்தும் வருகிருர்கள்''

ரஞ்சித்: ''இந்தியாவில் இருந்துதான் வருகிருர்கள் என நாம் கூறுகிரேம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்''

லக்ஷ்மன்: அதனை நீங்கள் கண்டுபிடியுங்கள். அதற்குத் தான் கண்காணிப்பு வலயம் வைத்திருக்கிறீர்களே''

திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கண்காணிப்புவலயம்இருப்பதால் என்னபயன்? ஏற்கனவே மூன்று கப்பல்களை வாங்கினீர்கள் இன்னும்மூன்று கப்பல்களை வாங்கப்போகிறீர்கள்.

''கண்காணிப்பு வலயம் இருந்தும் கூட சிறை உடைப்பில் வெளியேறியவர்கள் கடலைத் தாண்டியே போயிருக்கிருர்கள். பிரபல பெண்மணியான நிர்மலா நித்தியானந்தனும் இந்த வலயத்தை தாண்டியே போயிருக்கிருர்,

''நாட்டிலுள்ள பிரச்னைகளைத் தீர்க்க அரசியல் தீர்வு காண்பதுதான் ஒரேமார்க்கம்'

### சபையில் குழப்பம்

கலவான எம் பி. திரு. சரத் முத்தெட்டுவேகம பேசுகையில், ''நடந்துமுடிந்த இடைத் தேர்தலின்போது ஒரு உறுப்பினர் துப்பாக்கியுடன் நின்ருர்'' என்று குறிப்பிட்டபோது சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டு, சுமார் 20 நிமிட நேரம் நீடித்தது.


கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

# இராணுவத்தினரிடமிருந்து இளைஞர் தப்பினுராம்

## புளியங்குளத்தில் இளைஞர் கைது

[வவனியா]

புளியங்குளத்தில் இராணுவத்தினர் சோதனை செய்த போது சந்தேகத்தின்பேரில் இளைஞர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டார்.

சில நிமிட நேரத்தில் துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டதாம். தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் இராணுவத்தினருடைய பிடியிலிருந்து தப்பியோடினுராம்.

இதனையடுத்து தப்பியோடிய இளைஞனின் சகோதரனும், வயோதிப தந்தையும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். புளியங்குளம் பகுதியில் மேலும் ஆறு இளைஞர்கள் கைதாகியுள்ளனர் என தெரியவருகின்றது.

## எம்.ஜி.ஆர் சுகமடைய பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு தனியார் போக்கு வரத்து சாரதி, நடத்துனர் சங்கத்தால்கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ் நாடு முதலமைச்சர் திரு.எம் ஜி.ராமச்சந்திரன் விரைவில் சுகமடைய வேண்டுமென்று பிரார்த்தித்து தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் கூட்டுப் பிரார்த்தனையொன்றை நடத்தினர்.

★

## தாவடியில் உண்ணுவிரதம் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்).

தாவடிதெற்கு காளிகோவிலில் நேற்றுமுன்தினம்சுமார்50இளைஞர்கள் தமிழக முதல்வரின் உடல் நலம் வேண்டி உண்ணுவிரதம் மூலம் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

இவ் உண்ணுவிரத வழிபாடு யாழ்ப்பாணம் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியுடன் நடம் பெறுகின்றது. இவ் இளைஞர்களில் 20 பேர் தொடர்ந்துகந்தசஷ்டி விரதத்தையும் எம்.ஜி.ஆர். நலன் குறித்து மேற்கொள்வர் என்று கூறப்பட்டது.

## 'பயபக்தியுடன் தொண்டாற்ற வேண்டும்'

(சுழிபுரம்)

''பத்துப்பேர் ஒரே மனத்தராய் செயலாற்றினுல் உலகத்தையே மாற்றியமைக்கலாம் என்று யோகர்சுவாமிகள் கூறியதை எங்கள் குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் எமக்கு அடிக்கடி நினைவுபடுத்துவார். இதனை நாங்கள் உய்த்துணர்ந்து செயலாற்றுவோமானுல் சைவநெறியின் பரந்த உண்மைகளை பேணிப் பரப்பும் பணியில் வெற்றிகாண்பது திண்ணம் என்று இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு.சோ அருணுசலம் அளவெட்டி ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய ஆச்சிரம வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் ''நாங்கள் உண்மையோடும், ஊக்கத்தோடும் பயபக்தியோடும் தொண்டாற்ற வேண்டும் என்று கூறினர்.

## பஸ்ஸை கொண்டு சென்றனர்

[யாழ்ப்பாணம்]

வ.போ.ச. பஸ் ஒன்றை வசாவிளானில் வைத்து மறித்த ஆயுதப்படையினர் பிரயாணிகளை இறக்கிவிட்டு பஸ்ஸை கொண்டுசென்றதாகக் கூறப்படுகிறது.

இதனுல் பிரயாணிகள் வேறு வாகனங்கள் மூலம்பயணத்தை மேற்கொண்டனர். பஸ் பின்னர் பிற்பகல் திருப்பி ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (க)

## அடிக்கடி ஆசிரியர்களுக்கு இடமாற்றமாம்

[மன்னுர்]

மன்னுர் கல்வித் திணைக்கள ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை குறுகிய காலத்தில் அடிக்கடி அமுல்படுத்தி வருவதால் இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இது பற்றி மன்னுர் தமிழ் ஆசிரியர் சங்கமும், ஜாதிக அத்தியாபன சேவா சங்கமும் கவலை தெரிவித்துள்ளன.

## மின் விஸ்தரிப்பு வேலைகள்

(சுழிபுரம்)

யாழ்ப்பாண மாவட்டசபை சுழிபுரம் உப அலுவலகப் பகுதியில் மின்விஸ்தரிப்பு வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றது.

சுழிபுரம் கிழக்குப்பகுதி,சுழிபுரம், பறுளை இருத்தலடிப் பகுதி,பண்ணுகம், பண்டத்தரிப்புப்பகுதி ஆகிய இடங்களில் மின்இணைப்பு வேலைகள் செய்யப்பட்டு மின்சாரம் உடன் வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனத்தில் கந்த சஷ்டி விழாவை அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் 'கந்தரநுபூதி' பற்றி தினமும் பிற்பகல் 2-15 மணிக்கு சொற்பொழிவாற்றுவார்.

## உண்ணுவிரதம்

[சாவகச்சேரி]

தனங்கிளப்பு,மறவன்புலோ இளைஞர்கள், யுவதிகள் ஒருங்கிணைந்துவெள்ளிக்கிழமை அபிராமி நாடகமன்றத்தின் தலைவர் ரி. எஸ்.மணியத்தின் சார்

(7ம் பக்கம் பார்க்க)


போம்

அதிசய சலவை தூள் உங்கள் துணிகளை வெண்மையாகவும் பளபளப்பாகவும் துவைக்கும்

நயமான விலையும் கூட




தயாரிப்பாளர்:
சின்டெட கம்பனி பிரைவேட் லிமிட்டெட்
தொழில் நுட்பவல்லுனர்
தெய்கோகு ககோ கம்பனி லிமிட்டெட்
ஒசாகா, யப்பான்

| | | | |
|---|---|---|---|
| 50 கிராம்ஸ் | 1-90 | 225 கிராம்ஸ் | 8-60 |
| 550 கிராம்ஸ் | 19-80 | 1 கி. கிராம் | 85-00 |



# லக்ஸ்பிறே நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து இறக்குமதியாதம் பால்மா.




நியூசிலாந்திலும் ஒல்லாந்திலும் இருந்து தருவிக்கப்பட்டு. எந்தக் கட்டத்திலும் எவர் கையும் படாமல் உங்களை நாடும் லக்ஸ்பிறே அதி நவீன இயந்திர சாதனங்களின் மூலம் அடைக்கப்படுகின்றது

லக்ஸ்பிறே கலப்பற்றதும், சுத்தமானதும் சுகாதாரமானதும் என்பது நிச்சயம்.

நாட்டின் எல்லாப்பாகங்களிலும் விற்கப்படும் லக்ஸ்பிறே எந்த இடத்திலும் ஒரே தரத்தில் உள்ளது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இது ஒரு பொதுசன ஸ்தாபனம். இதன் பங்குதாரர்கள் இத்தீவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏக விநியோகஸ்தர்கள்.

S. V. முருகேசு அன் சன்ஸ் 154, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
சிற்றி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி.யாழ்ப்பாணம்.



நிர்வாக அதிகாரி லங்கா மில்க்ஃபுட்ஸ் (சீ.டபிள்யூ.ஈ) லிமிட்டெட், வெலிசர.

லக்ஸ்பிறே-நாட்டு மக்களின் ஊட்டம் மிகுந்த பாலுணவு.

ZENITH

## உண்ணுவிரதம்....

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

பில் தமிழகமுதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் உடல்நிலை குணமடையும் பொருட்டு மணற்காடு கந்தசாமி கோவிலிலும், கறையான் புற்று கந்தசாமி கோவிலிலும் ஒரு நாள் உண்ணுவிரதமும், விசேஷட பூசைகள், ஆராதனைகளும் நடாத்தினர்.


**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சய தாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்—ராதா
சிவச்சந்திரன்
**ஆனந்த ராகம்**
(புதியபிரதி- ஈஸ்மன்கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Carolyn Judd, Teri Gusman
Angel Colbert
FIVE ANGRY WOMEN
(Strictly For Adults)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி
10-30, 2-15, 4-45, 7-00
Bruce Lee in
FIST of FURY
(Adults Only)

**வின்ஸர்** [யாழ்.]
10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்-விஜயா
**நல்ல நேரம்**
(புதிய பிரதி)
29-10-84 முதல்
EBONY IVORY
AND JADE

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 2-30,
4-30, 6-15
Bruce lee in
DRAGON STRIKES
AGAIN
ஆரம்பம்முதல் இறுதி வரை குவ்பூ, கராட்டி சண்டைகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும்

27 To 30
**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
CHARLES BRONSON
LEE MARVIN in
Death Hunt
Action-Packed-Adventure
இரண்டு குழுவினருக்கிடையில் ஏற்படும் இத்துப்பாக்கிச் சண்டையின் முடிவுதான் என்ன?

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CANAN THE
BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி- பிரமிளா- ஸ்ரீதேவி
**கவரிமான்**
ஈஸ்மன்கலர் - புதியபிரதி]


# இன்றைய பலன்

மாதம்-ஐப்பசி
திகதி- 11 (27-10-1984)
வாரம்-சனி
திதி-திருதியை பிற்பகல் 1-01 வரை
நக்ஷத்திரம்- அனுசம் பிற்பகல் 1-51 வரை

மேடம்:- இதயம் எரிமலையாகும் எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கு இடமுண்டு அதிக பேச்சினைத் தவிர்க்கவும்.

இடபம்:- வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும் காதல் வட்டாரங்களில் கலகலப்பு தென்படும் இல்லத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

மிதுனம்:- தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களால் வீண்பெயர் கேட்க நேரிடும் கலகச் செய்திக்கு இடமுண்டு.

கடகம்;- அன் புக்கரங்கள் அணைக்கும் அதிஷ்டதேவதையின் பார்வையும் பதியலாம் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும்.

சிங்கம்;- முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும் இனபந்துக்களுடன் தொடர்புகள் பெருகும் பம்பரம் போல் சுழன்று பணியாற்றுவீர்கள்.

கன்னி:- பொதுப் பணிகளில் ஈடுபட விரும்புவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம் அதிஷ் கரமான தினம்.

துலாம்;- சீறிவரும் கோபம் உங்களை நிலை தடுமாற வைக்கும் தானியநஷ்டத்திற்கு இடமுண்டு அடக்கமும் செலவினங்களை கட்டுப்படுத்தும் தன்மையும் வேண்டும்.

விருச்சிகம்:- மனதில் போராட்டங்கள் அதிகரிக்கும் இனத்தவர் ஒருவரின் மீது ஆத்திரம் பிறக்கலாம் உடல் நலனும் பாதிக்கப்படலாம்.

தனுசு:- மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு இன்று நல்ல நாள் உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும் குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும்.

மகரம்:- நினைத்த காரியத்தில் தடைகள் ஏற்படும் சிலரின் கண்டனங்களுக்கு இலக்காகலாம் மனத்திடம் விரும்பத் தக்கது.

கும்பம்:- வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் முன்னேற வழிதோன்றும்.

மீனம்;- இல்லத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை
5-30 'நியூ ஸ்பைடார்மேன்'
5-55 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-25 தொல்கால ஆராய்ச்சி
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 'பக்னேகர்ஸ்' (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 நாடகம் (சிங்களம்)
9-05 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 'ஸ்டாஸ்கி அன்ட் ஹச்'
10-30 உலகச் செய்திகள்
10-35 'ஸ்டார்ஸ்கி, தொடர்ச்சி
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## கந்தசஷ்டி உற்சவம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்த சுவாமி தேவஸ்தான கந்த சஷ்டி உற்சவம் நேற்று முன் தினம் ஆரம்பமாகி உள்ளது.

உற்சவத்தை யொட்டி விரதம் அனுட்டிக்கும் பக்தர்களுக்கு உதவும் வகையில் பல ஏற்பாடுகளை தேவஸ்தான பிரதம குரு மகாராஜ ஸ்ரீ.சு. து ஷண்முகநாதக் குருக்கள் செய்துள்ளார்.

சூரசங்கார மகா சக்தி வேல் வாங்கும் உற்சவம் 27ம் திகதி திகதியும் சூரசங்கார உற்சவம் 29ம் திகதியும் தீர்த்த உற்சவம் 30ம் திகதியும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ ★ ★

கந்தவனக் கடவை முருகன் ஆலய கந்தசஷ்டி உற்சவம் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமானது.

இம் முறை உற்சவங்களை மாலை 5 மணிக்கு முன்பாக நடத்தி முடிக்க உத்தேசித்துள்ளதாகவும் இறுதி நாளான 29ம் திகதி சூரசங்கார உற்சவம் நடை பெறவுள்ளதாகவும் ஆலய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் பூரணசுகமடைவதற்கு நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் மண்டபத்தில் சுமார் 150 பேர் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

காலை 8மணிக்கு ஆரம்பமான இப்பிரார்த்தனை மாலை 5 மணிக்கு முடிவடைந்தது இப்பிரார்த்தனையில் அ. தி. மு. க தொண்டர்களும் கலந்து கொண்டார்கள்.

மிக அமைதியான முறையில் பிரார்த்தனை நடைபெற்றது.

## அ.தி.மு.க இளைஞர்கள் கந்தசஷ்டி

தமிழக முதல்வர் திரு.எம். ஜி. ராமச்சந்திரன் பூரணசுகமடைய நேற்று முன்தினம் முதல் 25 அ தி மு க. இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள முருகன் கோவில்களில் கந்த சஷ்டி விரதம் அனுஷ்டிக்கிறுர்கள்.

25 இளைஞர்களின் பெயர்ப் பட்டியல் நேற்று அ தி.மு.க. தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. [க]

## படைக்குறைப்பு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தி தாண்டி விடுமென்ற செய்தி அதிர்ச்சி தருகிறதென்றும் அவர் சொன்ஞர்.

உலகப் படைக் குறைப்பு இயக்கத்திற்கு உதவி செய்வது பாரதமாகும். இந்த இயக்கத்திற்கு ஒரு கோடி டாலரை அளிக்குமென்று ஐ.நா. வின் பாரதப் பிரதிநிதி சாவித்திரி தெரிவித்தார்.

## ஆதிக்குடிகள்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது. அங்கு ஆய்வுகளை மேற்கொண்ட தொல்பொருள் ஆய்வாளர்கள் மனிதனுடைய எலும்புக்கூடுகள் எதனையும் கண்டெடுக்கவில்லை. எனினும் கிழக்கு ஆபிரிக்காவில்வாழ்ந்த மக்களைவிட சைபீரியாவில் வாழ்ந்த ஆதிக்குடிகள் பல் வேறுதுறைகளில் முன்னேற்றமடைந்திருக்கிறுர்கள் என்ற கருத்தை இந்த ஆய்வுகள் மேலும் வலுப்படுத்தியுள்ளன.

## ஆடை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இது பழைய ஆடைகளில் இருந்து புதிய பகுதிகளை வெட்டி எடுப்பது போலுள்ளது. இதனுல் தற்போது நிலைமையோசமாகி பொருத்தித் தைப்பதற்கே அவர்களிடம் வழியில்லாமலிருக்கிறதென்பது தெளிவாகிறது'' என்ருர். (கி)

## கந்த ஷஷ்டி

(யாழ்ப்பாணம்

இன்று வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் காலை ஸ்நபனு பிஷேகமும். விஷேச பூஜையும், திருச்செந்தூர் புராணபடனமும், மாலை சந்தனக்காப்பு சாத்தப்பெற்ற செந்தில் குமரனுக்கு நியசபூர்வ ஷண்முகார்ச்சனையும், வசந்தமண்டப பூஜையும், திருவிழாவும் நடைபெறும்.

## சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த பூட்டில்லாத சைக்கிள் ஒன்று நேற்று மாலை திருடப்பட்டது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே. அன்ரனி இதுபற்றி ஆஸ்பத்திரி பொலிசாருக்கு அறிவித்தார். (க)


**வீடியோ புளொசம்ஸ்**
உங்கள் சகல வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோ படமாக்கி கொடுப்போம்.
எங்கள் பணி இந்தியா, கொழும்பு போன்ற இடங்களிலும் சிறப்பாக நடைபெறுகிறது
**வீடியோ புளொசம்ஸ்**
30, சிவப்பிரகாசம் றேட்,
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.
(430)

**தொழில் வாய்ப்பு**
எலக்றிக்கல் வயரிங் பயிற்சி
1984-ம் ஆண்டின் இறுதிப் பயிற்சியாகையால் முதல்தர சித்தி பெறுபவர்களுக்கு தொழில் வழங்கப்படவுள்ளது.
10 மாணவர்களுக்கு மட்டும் இடமளிக்கப்படும்
விண்ணப்ப முடிவு திகதி 01-11-84
இன்ஸ்ரிரியூட் ஒவ்
என்ஜினியரிங் ரெக்னெலொஜி,
11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (450)

**மின்சார பிரச்னையா?**
வீட்டு வயரிங் செய்ய (பொயின்ருக்கு ரூபா 35/-)
★ மோட்டர் ★ ரான்ஸ்போமர் ★ ஸ்பீக்கர்
★ வாஷிங் மெஷின் ★ மிக்சர்ஸ்
★ லிக்குடைசேர்ஸ் ★ எலெக்றிக் குக்கர்
★ மின்விசிறிகள் ஆகியன
திருத்த / றீவைன்டிங் செய்ய
**ஒமேகா** கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிஅருகில்)

**தொழிற் பயிற்சிகள்**
THEORY AND PRACTICALS
ஆரம்பம்: 1-11-84
[1] Industrial and House Wiring - 2மாதம்-Rs. 500/-
[2] Motor Re-winding - 4 மாதம் - Rs. 800/-
[3] Electrical Engineering Practice - 6மாதம்-Rs. 850/-
கல்வித்தகைமை:
G. C. E ORD. LEVEL விஞ்ஞானப் பாடங்கள்.
செய்முறைப் பயிற்சி – ஒமேகாவில்
OMEGA TECHNICAL INSTITUTE,
448, K. K. S. ROAD, JAFFNA.
(Near - Jaffna Hindu College)

**பிறந்த தின வாழ்த்து**



**செல்வன் நர்மதன்**

கொக்குவில் சேர்ச் ஒழுங்கையைச் சேர்ந்த அகிலேஸ்வரன் நிருபா தம்பதிகளின் செல்வப்புதல்வன் நர்மதன் இன்று (27-10-84) முதலாவது பிறந்த தினத்தை இறை அருளால் மிகச் சிறப்பாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகிருர் இவரை அமெரிக்காவில் இருக்கும் டடாவுடன், மமா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, நிரஞ்சன் அங்கிள், அமெரிக்காவில் இருக்கும் றவிஞ்சன் அங்கிள், சித்தப்பாமார், மாமிமார், மாமாமார், பாட்டிமார், அன்ரிமார், அங்கிள்மார், பெரியப்பா, பெரியம்மாமார், உறவினர் அனைவரும் இறை ஆசி பெற்று சீர் கல்வி பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர். (373)

# சீன உதவியுடன் அணு குண்டுகளை தயாரிக்கும் திட்டத்தை தொடர்ந்தால் பாகிஸ்தானுக்கு ஆபத்து!

[வாஷிங்டன்]

அமெரிக்காவின் இராணுவ உதவியை இழக்கும் அபாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளதென்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சீன உதவியுடன் அணுகுண்டுகளைத் தயாரிக்கும் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதாக அமெரிக்க அதிகாரிகள் நம்புகிறார்கள் ''அப்படியல்ல'' என்று பாகிஸ்தான் திரும்பத் திரும்ப வாக்குறுதி கொடுத்துள்ள போதிலும், அமெரிக்க அதிகாரிகளிடம் இப்படியொரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது

கடந்த மாதம் பாகிஸ்தான் அதிபர் ஷியாவுக்கு அமெரிக்க அதிபர் றேகன் எழுதிய தனிப்பட்ட கடிதத்தில், பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கும் திட்டத்தைத் தொடருமானல் அமெரிக்க இராணுவ உதவியை இழக்கவேண்டிய அபாயம் ஏற்படுமென்று எச்சரித்திருப்பதாகத் தகவலொன்று தெரிவிக்கிறது.

## எம். ஜி. ஆர். உடல் நிலை: இந்திராவுக்கு நெடுஞ்செழியன் விளக்கினர்

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை சீராக முன்னேறிவருவதாக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

### இந்திராவுக்கு விளக்கினர்

திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்றுப் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலைபற்றி இந்தியப் பிரதமருக்கு விளக்கிக் கூறினர்.

முதல்வரின் உடல் நிலை குறித்து அமெரிக்க, ஜப்பானிய டாக்டர்கள் தெரிவித்த கருத்துக்கள் பற்றியும் இவர் இந்தியப் பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

அதேவேளை எம். ஜி. ராமச்சந்திரனைப் பரிசோதனைசெய்ய ஜப்பானிய வைத்திய நிபுணர் மீண்டும் சென்னை வருவாரென்று தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர் எச். வி ஹண்டே தெரிவித்தார்.

தமிழக முதல்வர் விரைவில் குணமடையவேண்டுமென்று பிரார்த்தித்து, தமிழ்நாடு ஆலயங்கள் தோறும் நேற்றும் விசேட பூசைகள் நடத்தப்பட்டன. (வெ)

## அமெரிக்க துணை அமைச்சர் ஜனதிபதி சந்திப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் துணை வெளிநாட்டமைச்சர் திரு. றிச்சார்ட் மேர்பி நேற்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை ஜனதிபதி மாளிகையில் சந்தித்தார்.

இவருடன் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளின் அமெரிக்கத் தூதுவர்களும் ஜனதிபதியைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தனர்.

## கடலில் மீனவர்மீது தாக்குதல்கள்!

### 'அவுட்போட்' இயந்திரமும், படகும் சேதம்!!

(கொழும்புத்துறை நிருபர்)

செம்பியன்பற்றுக் கடலில் இரு மீனவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் பாவித்த கண்ணாடி இழைப் படகும், அதன் இயந்திரமும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செம்பியன்பற்றுக் கடற்பகுதியில் இடம்பெற்றது. தாக்குதலுக்குள்ளான இரு மீனவர்களும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலிடம் இது தொடர்பாகப் புகார்செய்துள்ளனர்.

ஆறு குதிரைச் சக்தி 'அவுட்போட்' இயந்திரம் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப் படகில் இவ்விரு மீனவர்களும் கடலுக்குச் சென்றுள்ளனர். கடலில் இவர்களை இடைமறித்த படையினர் இவர்களைத் தாக்கியதுடன் இவர்களது 'அவுட்போட்' இயந்திரத்தையும் சேதப்படுத்தினராம். பின்னர் இவர்களின் படகையும் வெடிவைத்துச் சேதப்படுத்தினராம். இதனல் அப்படகு நீரில் மூழ்கவே இவ்விரு மீனவர்களும்கடலில் தத்தளிக்கஆரம்பித்தனர். பின்னர் அவ்வழியாகவந்த வேருெரு மீன்பிடிப் படகு இவ்விரு மீனவர்களையும் பாதுகாப்பாகக் கரைசேர்த்தது. (கி)

## நெடுஞ்செழியன் பொறுப்புகளை ஏற்ருர்!

(சென்னை)

தமிழ்நாடு மாநில நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், முதல்வர் எம் ஜி. ஆரின் எல்லா இலாகாப் பொறுப்புக்களையும் கவனித்துவருவார்.

தமிழக கவர்னர் வெளியிட்ட அறிக்கையொன்றில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மருத்துவச் சிகிச்சை பெற்றுவரும் காலத்தில், இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அமைச்சரவைக் கூட்டத்துக்கு திரு. நெடுஞ்செழியன் தலைமை வகிப்பாரென்றும் அவ்வறிக்கை தெரிவித்தது.

பொதுத்துறை, சட்டம், ஒழுங்கு, நிர்வாகம், மதுவிலக்கு, திட்டமிடுதல்போன்ற முக்கிய பொறுப்புக்களைத் திரு. நெடுஞ்செழியன் கவனிப் பார்.

## முதலிடம் பெற்ற மாணவன்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார் பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலய மாணவன் செல்வன் நந்தகுமாரன் தர்மராசா ஸ்ரீஇராமகிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு பாடசாலை ரீதியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதலிடமும்; அகில இலங்கை ரீதியில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில் இரண்டாம்இடத்தையும் பெற்றுள்ளார். கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

## இராணுவம், பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவுகச்சேரி மற்றும், அரச திணைக்களங்களிலுள்ள சகல ரோனியோ, தட்டச்சு யந்திரங்களும் முல்லைத்தீவு இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டது.

மேலிடத்தின் பணிப்பைத் தொடர்ந்து இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டது.

கச்சேரியிலிருந்து ரோனியோ, தட்டச்சு யந்திரங்கள் இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

அண்மையில் கல்விக் கந்தோரில் நடந்த கொள்ளையைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### கிளிநொச்சியில்

இதே மாதிரி, கிளிநொச்சி அரச திணைக்களங்களிலுள்ள சகல ரோனியோ மற்றும் தட்டச்சு யந்திரங்கள் கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

## உரும்பராய் சந்தையில் 'யானை குதிரை விலை!'

(உரும்பராய்)

உரும்பராய் சந்தையில் மரக்கறி மற்றும் மீன் வகைகள் 'யானை குதிரை' விலைகளில் விற்கப்படுகின்றன!

மரக்கறி கிலோநிறையிலும், மீன் ரூத்தல் நிறையிலும் விற்கப்படுகிறது. ஒரு ரூத்தல் மீன் இருபத்தைந்து ரூபாவுக்கும் விற்கப்படுகிறது!

அன்ருட உழைப்பைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் ஏழைமக்கள் சந்தை வியாபாரிகளின் விலைத் தாக்குதலினுல் பாதிக்கப்பட்டு வேறு சந்தைகளுக்கு நடந்துசென்று மலிவான விலையில் காய்கறிகளையும், மீன் வகைகளையும் வாங்கும் துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர்!

## நாச்சிமார்கோவில் சம்பவம்: சந்தேக நபருக்கு றிமாண்ட்: விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலடி கார் விபத்தில் பலியான மாணவி வீ. நிரோலினியின் மரண விசாரணை நேற்று ஆரம்பமானது.

யாழ். பதில் நீதவான் கே. பி. எஸ். வரதராசா மரண விசாரணையை நடத்தினர்.

காரைச் செலுத்தியவரான சந்தேகநபர் பிச்சையப்பா இம்மாதம் 29-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டார்

மரணவிசாரணை 29-ம் தேதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

## மரண அறிவித்தல்

### அம்பிகைபாகர் சண்முகத்துங்கம்

இவர் முன்னுள் கொழும்பு கொமோஷல் கொம்பனி, சிங்கப்பூர் கமன்ஸ் M and E Project Co-ordinator உம் ஆவார். இவர் சரோஜினியின் (அற்கின்சன் ரோட், வட்டுக்கோட்டை) அன்புக் கணவரும், கண்ணன், மாயவன், நந்தினி, ராகவன், ரகுராமன், தர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இளைப்பாறிய நிலஅளவை உதவி அத்தியட்சகர் மா. அம்பிகைபாகர், திருமதி அம்பிகைபாகர் (வேம்படி வளவு, தொண்டமானுறு) ஆகியோரின் அருமைப் புதல்வரும், குலோத்துங்கம், திருமதி விமலாசனி தெய்வேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் இவர் புறூனியில் 15-10-84ல் காலமானர். மரணச் சடங்குகள் 28-10-84ல் புறூனியில் நடைபெறும்.

462

## கிளிநொச்சி இளைஞர்கள் மருதானையில் கைது!

(மருதானை)

கிளிநொச்சியைச் சேர்ந்த பன்னிரண்டு இளைஞர்கள் சந்தேகத்தின்மீது நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

மருதானையிலுள்ள ஒரு வீட்டில்வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## இன்று பொன்விழா

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மத்தி ஐக்கிய நாணய சங்கத்தின் 50-வது வருட பொன்விழாக் கூட்டம், இன்று கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

சிறப்பு விருந்தினராக யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் கலந்துகொள்வார். (க)

## மினி வானில் வந்த இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுக்காலை மினிவான் ஒன்றில்வந்த இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு ஆயுதப்படையினரால் அதேவானில் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ். சுப்பிரமணியம் பூங்காசந்தியில், வேகமாக வந்த வெள்ளைநிறவானை நான்கு கவசவாகனங்கள், சுற்றிவளைத்து மறித்ததாகக் கூறப்படுகிறது.

வானில் இருந்த இருவர் கைகளை உயர்த்தியபடி, பூங்கா மதில்சுவருடன் வந்து, சுவரைபார்த்தபடி நிற்க. பலத்தசோதனை நடைபெற்றதாகக்கூறப்படுகிறது.

இதன்பின் அவ்விருவரும், வானின்பிற்பகுதியில் ஏற்றப்பட்டு, அந்தவான் முகாமிற்கு ஆயுதப்படையினரால் ஓட்டிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அங்குவந்த கவசவாகனங்களும், வானுக்குப்பின்னுல் சென்றுகொண்டிருந்தன. (க)

### மின்னேரியா----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ ல. சு. கட்சியைச் சேர்ந்த திரு. ரத்னதேசப்பிரிய சேனநாயக்கா 6,280 வாக்குகளைப் பெற்ருர்.

மின்னேரியா இடைத்தேர்தலில் 48 சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் ஒருவர் மட்டுமே 209 வாக்குகளைப் பெற்ருர். ஏனையவர்கள் 100க்கும் குறைவாகவே வாக்குகளைப் பெற்றனர். இதனையடுத்து இங்கு போட்டியிட்ட சகல சுயேட்சை வேட்பாளர்களும் தமது கட்டுப் பணங்களை இழந்தனர். இங்கு சுயேட்சை வேட்பாளர்கள் அனைவரும்பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 1374 ஆகும்.

குண்டசாலை இடைத்தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் திரு. ஆர் பி விஜேசிறி 26,280 வாக்குகளைப்பெற்று வெற்றியீட்டினுர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. வி. என். ஜயரத்ன 7.778 வாக்குகளையும் ஸ்ரீ. ல ம. கட்சி வேட்பாளர் திரு. மகிந்த சேனநாயக்கா 1,727 வாக்குகளையும் பெற்றனர்

இங்கு மொத்தம் 36 சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் இருவருக்குமட்டுமே 100 வாக்குகளுக்குமேல் பெறமுடிந்தது சுயேட்சை வேட்பாளர்கள் மொததம் 1209 வாக்குகளையே பெற்றனர். இதனையடுத்து ஸ்ரீ. ல. ம. கட்சி வேட்பாளர் உட்பட சகல சுயேட்சை வேட்பாளர்களும் குண்டசாலையில் தமது கட்டுப்பணங்களை இழந்தனர் (கி)

### குண்டுகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் அமைந்திருந்தது. இராணுவத்தினர் இதனைப்பயன்படுத்திவந்தனர். கடந்த ஆகஸ்ட்மாதம் இம்முகாம் மூடப்பட்டு, இங்கிருந்தும் இராணுவம் வெளியேறியது.

இருவாரங்களுக்கு முன்னர் மாதகல் பகுதியில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இக்கட்டிடம் இராணுவத்தினரின் தற்காலிக முகாமாக மாற்றப்பட்டது. மாதகலில் இராணுவநடமாட்டம் முடிவடைந்ததும், மீண்டும் இராணுவம் இங்கிருந்து கடந்தசிலதினங்களுக்கு முன்னர் வெளியேறியிருந்தது

நேற்று முன்தினமிரவு காரொன்றில்வந்த இனந்தெரியாத ஆறுநபர்கள் இந்ததற்காலிக இராணுவமுகாம் கட்டிடத்தை குண்டுகள் வைத்துத்தகர்த்தனர் என்று கூறப்பட்டது. (கி)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் -2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.